මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ ලේකම් කාර්යාලය, අංක 02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல: PRE/2024/76** 2024.09.12

## சனாதிபதித் தேர்தல் - 2024 செப்டம்பர் 21

### வாக்குப் பெட்டிகள் மாற்றப்படுதல் என்ற தப்பெண்ணத்தைக் களைதல்

வாக்கெடுப்பு முடிவடைந்ததும் வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து கொண்டு வரப்படுகின்ற வாக்குச் சீட்டுகள் இடப்பட்டுள்ள அதே வாக்குப் பெட்டி எந்த மாற்றமும் இன்றி உரிய வாக்கெண்ணும் மண்டபத்திற்கு கொண்டுவந்து ஒப்படைக்கப்படுகின்றதா என்பது குறித்து சில அரசியல்வாதிகள்/ வேட்பாளர்கள் மத்தியில் சந்தேகங்கள் நிலவுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறான முறைகேடு எதுவும் இடம்பெற முடியாது என்றபோதும், அச்சந்தேகத்தைக் களைவதற்கான ஒரு நடவடிக்கையாக கடந்த தேர்தல்களின் போது வாக்குப் பெட்டியை வெளியில் தெரியும்படியாக பையொன்றில் இட்டு பூட்டுப் போட்டு கொண்டுவருவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அந்த நடைமுறையே இத்தேர்தலின் போதும் அமுல்படுத்தப்படுகிறது. அது தவிர வாக்கெடுப்புக்குப் பிறகு வாக்குப்பெட்டியை இலச்சினையிடும் போது எழுமாறாக தெரிவுசெய்யப்பட்ட வாக்கெடுப்பு நிலைய பணியாட்குழு அங்கத்தவர்களினால்/வாக்கெடுப்பு முகவர்களினால் 6 பிரதிகளைக் கொண்டதாக கையொப்பமிடப்பட்ட படிவமொன்றின் மூலப்பிரதியையும் அதில் ஒட்டி அதன் ஒரு பிரதியை பாதுகாப்பான முறையில் வாக்கெண்ணும் மண்டபத்திற்கு அனுப்புவதுடன், மற்றைய பிரதிகளை அச்சந்தர்ப்பத்திலேயே வாக்கெடுப்பு நிலைய முகவர்களுக்கு விநியோகிப்பதற்கும் செயலாற்றப்படும்.

அது தவிர வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து வாக்கெண்ணும் மண்டப வளவுக்கு அருகிலிருந்த இறுதி பொலிஸ் காவல் சாவடி வரை வாக்குப்பெட்டியை எடுத்துச் செல்லும் வாகனத்தைப் பின்தொடர்ந்து வேட்பாளர்களின் பிரதிநிதிகள் வாகனமொன்றில் வருவதற்கு அவசியமென்று முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு இடமளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வேட்பாளரொருவருக்கு தேவைப்படுமாயின் இறுதி காவல் சாவடியிலிருந்து வாக்கெண்ணும் மண்டப வளவு வரை பாதையின் இரு மருங்கிலும் அனுமதி கிடைத்துள்ள தமது வாக்கெண்ணும் முகவர்களை நிறுத்திவைக்க முடியுமென்பதுடன், அது சம்பந்தமாக பொலிஸ் அலுவலர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவருக்கும் வாகனமொன்று வீதம் வாக்குப்பெட்டிகளைச் சுமந்து செல்லும் ஒவ்வொரு வாகனத்தையும் பின்தொடர்ந்து செல்வது நடைமுறைச் சாத்தியமற்றது என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன். அவ்வாறு செலலத் தேவைப்படும் நிலையத்தின் பெயர், எடுத்துச் செல்லும் வாகனத்தின் இலக்கம், வாகனத்தில் பயணிக்கும் முகவரின் பெயர் அடங்கிய விரிவான ஓர் அறிக்கை வாக்கெடுப்பு தினத்திற்கு மூன்று(3) நாட்களுக்கு முன்னர் ஒவ்வொரு அதிகாரம்பெற்ற முகவரினாலும் மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதுடன், அதற்காக வழங்கப்படும் வாகன அனுமதிப்பத்திரத்தை உரிய வாக்கெடுப்பு நிலையத்தின் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வாக்கெண்ணும் முகவர் ஒருவருக்கு பி.ப. 3.00 மணியில் இருந்து வாக்கெண்ணும் மண்டபத்திற்கு சமுகமாயிருக்க அனுமதியுண்டு. ஏனைய முகவர்களுக்கும்கூட வாக்கெண்ணும் வளவுக்கு பி.ப. 3.00 மணியில் இருந்து சமுகமாயிருக்கத் தடையேதும் இல்லை என்பது மேலும் அறிவிக்கப்படுகிறது.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்